GML

BOOK-POST

# வணக்கம் ரோட்டரி

## VANAKKAMM ROTARY - DISTRICT 2982

மாவட்டம் 2982

தமிழ் மாத இதழ்


| | | | | |
|---|---|---|---|---|
| மலர் – 1 | இதழ் – 4 | அக்டோபர் 2025 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ. 10/- |
| Volume - 1 | Issue - 4 | October 2025 | Tamil Monthly | Price : Rs. 10 |




Rotary

TEAM UNIQUE

தனித்துவமாக தன்னலமற்ற

2025-26

District Governor Rtn. Er. P. Sivasundaram
with RI President Rtn. Francesco Arezzo

# ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

## இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு

மாரடைப்புக்கான
நவீன பைபாஸ் அறுவை
சிகிச்சைகள்
(Beating Heart Bypass Surgeries)



இருதய வால்வு மாற்று
அறுவை சிகிச்சைகள்
(Valve Repair,
Replacement Surgeries)



சிக்கலான இருதய
அறுவை சிகிச்சைகள்
(Complicated Heart
Surgeries, Re Do Surgeries)



மகாதமனி சம்பந்தப்பட்ட
அறுவை சிகிச்சைகள்
(Aortic Dissection,
Aneurysmal Surgeries)

எக்மோ (ECMO) வசதிகளை கொண்ட
இருதய தீவிர சிகிச்சைப் பிரிவு

முழு நேரமும் செயல்படும் அவசர சிகிச்சைப் பிரிவு

ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

202, பெங்களூர் பை-பாஸ் ரோடு. சேலம் - 636 004. Ph: 0427-2338800

# பிரதியினுள்....





**05** Master Class 2025



**08** Star Project



**10** Rotary Multi District TRF & CSR மாநாடு



**14** புதிய உறுப்பினருக்கான மாவட்ட கருத்தரங்கம் "சங்கல்பம்"



**19** மாவட்ட ஆளுநரின் "அதிகாரப்பூர்வ விஜயம்"



**22** சங்க திட்டங்கள்



**25** Rotary International Convention




**26** CLUB Administration & Environmental Protection Seminar

ஆசிரியர் பக்கம்

# வணக்கம் ரோட்டரி



ஒவ்வொரு இதழும் பலதரப்பட்ட கதைகளை சொல்லும், ஆனால் நமது வணக்கம் ரோட்டரி மாத இதழ் உங்களது கதையைச் சொல்கிறது. அதில் சில பக்கங்களும், புகைப்படங்களும், அறிக்கைகளும் மட்டுமல்ல. கருணை, நட்பு, சேவை ஆகியவற்றை உயிர்ப்புடன் பதிவு செய்யும் ஒரு நாள்குறிப்பே. ஒவ்வொரு பதிப்பும் அன்புடன் உருவாக்கப்படுகிறது; நமது சங்கங்களின் ரோட்டேரியன்களின் பங்களிப்புகளால் வடிவமைக்கப்படுகிறது; அதை உயிர்ப்பிக்கிறவர்கள் நமது வாசகர்கள் தான்.

வாசகர்கள் இல்லாத இதழ் வெறும் மை மற்றும் காகிதமே. ஆனால் நீங்கள் இதைப் படிக்கும் போது, இந்த வார்த்தைகள் தூண்டுதலாக, செயலாக, நம்பிக்கையாக மாறுகின்றன. நீங்கள் வெறும் பார்வையாளர்கள் அல்ல; ரோட்டரியின் பயணத்தின் அங்கமாக இருக்கிறீர்கள். ஒரு மருத்துவ முகாமைப் பற்றிப் படிக்கும்போது, கூட்டுச் சேவையின் சக்தியை நினைவுகூர்கிறீர்கள். நட்பின் புகைப்படங்களைப் பார்க்கும்போது, எல்லைகளைத் தாண்டும் குடும்பத்துடன் இணைந்திருப்பதை உணர்கிறீர்கள். கல்வி உதவித்தொகை பற்றிப் படிக்கும்போது, சிறிய செயல்களும் பெரிய எதிர்காலங்களை உருவாக்கும் என்பதை உணர்கிறீர்கள்.

ஆசிரியராக, எனது கண்ணோட்டம் மிகவும் எளிமையானது. வணக்கம் ரோட்டரியின் ஒவ்வொரு இதழும் உங்களுக்கு தகவல் அளிப்பதற்காக மட்டுமல்ல, உங்களை ஊக்குவிப்பதற்காகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கட்டுரையும் ஒரு சிந்தனையைத் தூண்ட வேண்டும்; ஒவ்வொரு கதையும் உங்கள் இதயத்தை நெகிழச் செய்ய வேண்டும்; ஒவ்வொரு பக்கமும், ரோட்டரி என்பது கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறையாகும் என்பதை நினைவூட்ட வேண்டும்.

அன்பான நண்பர்களே, இந்தப் பக்கங்களை பெருமையுடன் வாசியுங்கள், உற்சாகத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள், அது மேலும் சேவைக்கான உங்களின் உற்சாகத்தைப் புதுப்பிக்கட்டும். நமது "வணக்கம் ரோட்டரி" ஒரு கண்ணாடியாகக் கருதுங்கள், நாம் எதைச் சாதித்திருக்கிறோம் என்பதை பிரதிபலிக்கிறது. அதே நேரத்தில், இது ஒரு விளக்காகவும் உள்ளது, முன்னேற்றப் பாதையில் நடத்துகிறது.

இந்த இதழ் நம் எல்லோருக்கும் சொந்தமானது. இது உங்கள் குரலும், உங்கள் நாள்குறிப்பும், உங்கள் தூண்டுதலுமாகும். நாம் ஒன்றிணைந்து, ரோட்டரியின் சேவை, நட்பு, நம்பிக்கை ஆகியவற்றின் கொண்டாட்டமாக தொடர்ந்து நிற்கச் செய்வோம்.

நல்லதே நினைப்போம், நல்லதே பேசுவோம், நல்லதே செய்வோம்...

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

ரோட்டரி சேவையில்,

**Rtn. Hemanath**
**GML Editor**

# ரோட்டரி பன்னாட்டு தலைவரின் செய்தி

**Rtn. Francesco Arezzo,** ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் 2025-26

அக்டோபர் மாதம் என்பது **Rotary**யின் சமூக பொருளாதார முன்னேற்ற மாதம். இது, சமூகங்கள் செழித்து, நிலையான எதிர்காலத்தினை உருவாக்குவதற்கான நமது முயற்சிகளை வெளிச்சமிட்டு காட்டும் முக்கியமான நேரமாகும்.

இந்த மாதக் கொண்டாட்டம், **Rotary**யின் முக்கியமான தலைமைத்துவ மதிப்புடன் சிறப்பாக ஒத்துபோகிறது. தலைமைத்துவம் என்பது மக்களை அவர்களுடைய முன்னேற்றத்தைத் தாங்களே வழிநடத்தச் செய்வதாகும். அதுதான் **Rotary**யின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் அடைய முயல்வதும் ஆகும்.

சமீபத்தில் தென் இந்தியாவில், **Rotary** உறுப்பினர்கள் ஆதிவாசி பெண்களுக்கு தையல் பயிற்சி வழங்கி, அவர்கள் வாழ்வாதாரம் ஈட்டவும், சமூகத்தில் மீண்டும் இணையும் வழியையும் திறந்தனர்.

இந்தப் பகுதியில், விதவைகள் அல்லது குடும்பத்தால் கைவிடப்பட்ட பெண்கள் பெரும்பாலும் சமூக மதிப்பை இழந்து, தங்களைத் வழிநடத்தும் வாய்ப்புகளின்றி வாழ்கின்றனர்.

இந்த நிலையை மாற்றும் நோக்கில், **Rotary Club of Windsor Roseland (Ontario),** இந்தியாவின் 3203 மற்றும் 3234 வட்டாரக் சங்கங்கள், மேலும் **Sevalaya Trust** ஆகியவை இணைந்து, 80 ஆதிவாசி பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும் பயிற்சியையும் வழங்கினர்.

மேலும், தையல் இயந்திரங்களை வழங்கிய நிறுவனம் ஆயுள் முழுவதும் இலவச பராமரிப்பு செய்ய ஒப்புக்கொண்டது.

இது **Rotary** தலைமைத்துவத்தின் சிறந்த எடுத்துக்காட்டு – சமூகத் தேவைகளை உள்ளூர்வாசிகள் தாமே தீர்க்கும் வழியும் ஆகும்.

இந்த அக்டோபரில், உலகம் முழுவதும் உள்ள **Rotary** உறுப்பினர்களை நான் கேட்கிறேன்.

✦ உங்கள் சமூகத்தில் உள்ளூர் பொருளாதார முன்முயற்சிகளை யார் முன்னின்று நடத்துகிறார்கள்?

✦ எந்த மறைக்கப்பட்ட திறமைகள் பயிற்சி அல்லது வழிகாட்டுதலால் வளர்க்கப்பட முடியும்?

✦ உங்கள் சங்கம் எவ்வாறு உள்ளூர் வணிகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் அல்லது சேமிப்பு குழுக்களுடன் இணைந்து வாய்ப்புகளை உருவாக்க முடியும்?

தலைமைத்துவம் எப்போதும் வெளிப்படையாக இருப்பது அல்ல. சில நேரங்களில் அது கேட்பது, இணைந்து செயல்படுவது, பிறரின் குரலை வலுப்படுத்துவது ஆகியவையாகும். **Rotary**யின் தத்துவத்தின் மையமும், நமது நீண்டநாள் தாக்கமும் இதில்தான் உள்ளது. சிறு கடன் குழுக்கள், தொழில்பயிற்சி பட்டறைகள், அல்லது தொழில்முனைவு திட்டங்கள் வழியாக திறன் வளர்த்தல் மூலம், சமூகங்கள் தாமே தங்களின் மாற்றத்தை முன்னின்று நடத்த முடியும்.

மக்கள் தங்களின் முன்னேற்றத்தை உரிமையாக்கிக் கொண்டால், அந்த மாற்றம் நிலைத்திருக்கும்.



நன்றியுடனும் அன்புடனும்,

**Francesco Arezzo**

President, Rotary International, 2025-26

# மாவட்ட ஆளுநர் செய்தி

இந்த **Uniquz** ரோட்டரி ஆண்டின் நான்காவது மாதத்தை நாம் எட்டும் தருணத்தில், நமது மாவட்டத்தின் அனைத்து சங்கங்களும் வெளிப்படுத்திய உற்சாகம், உறுதி, மற்றும் சேவைப் பற்றுக்காக நான் பெருமையுடனும் நன்றியுடனும் உள்ளேன். இதுவரை நமது பயணம் ஊக்கமூட்டும் ஒன்றாக இருந்து வருகிறது.

நமது மாவட்டமும் அதன் சங்கங்களும் பல பிரமிப்பூட்டும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் தங்கள் சமூகங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சேவை மற்றும் நட்பு நிகழ்வுகளின் மூலம் அவர்கள் ரோட்டரியின் உறுதியான பந்தத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளனர்.

நான் இதுவரை 5 சங்கங்களுக்கு முடீஏ மேற்கொண்டுள்ளேன், ஒவ்வொரு சங்கத்தின் ஏற்பாடுகள், உற்சாகம் மற்றும் பங்கேற்பால் சிறப்பான ஒன்றாக அமைந்திருந்தது. இவ்விஜயங்கள் நமது ரோட்டேரியன்களின் உறுதியையும், ரோட்டரிக்கான அர்ப்பணிப்பையும் மேலும் வெளிப்படுத்தியது.

ரோட்டரி சேலம் சவுத் சங்கம் சிறப்பாக நடத்திய புதிய உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டும் கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இது புதிய உறுப்பினர்களுக்கு ரோட்டரியின் மதிப்புகள் மற்றும் சேவை நோக்கங்களைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்கியது. அதோடு மட்டுமல்ல, ஒன்றுபட்ட உணர்வையும் ஊக்குவித்தது.



மேலும், நமது மாவட்டம் 2982 சார்பாக சமூக நலனுக்காக 6 டயாலிசிஸ் இயந்திரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டு, பல உயிர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் பெரும் மனிதாபிமான சேவையாக அமைந்திருக்கிறது. இது ரோட்டரியின் உயிர்த்துடிப்பையும் அதன் சக்தயையும் வெளிப்படுத்துகிறது.

இந்த மாதம் ஒரு வரலாற்றுச் சம்பவத்துடன் நிறைவடைந்தது – ரோட்டரி மாவட்டங்கள் 2982 மற்றும் 3203 இணைந்து திருப்பூரில் நடத்திய **Rotary Multi-District TRF & CSR Conclave.** இந்த மாநாடு சிறப்பான பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. முக்கிய ரோட்டரி தலைவர்கள் தங்கள் ஊக்கமூட்டும் கருத்துக்களை பகிர்ந்தனர்: **RID Rtn.** முருகானந்தம். **M (MMM), TRF Trustee** துணைத் தலைவர் டாக்டர் பாரத் பாண்ட்யா மற்றும் **TRF Trustee** தலைவர் ஹோல்கர் க்னாக் தங்களது தெளிவான நோக்கத்தையும், தாக்கமிக்க சேவைகளின் முக்கியத்துவத்தையும், ரோட்டரியின் சமூக மேம்பாட்டில் முக்கிய பங்கைப் பற்றிய ஊக்கமூட்டும் உரைகளையாற்றினர்.

இந்த மாநாடு ரோட்டரியின் ஒற்றுமை, கற்றல் மற்றும் பகிர்ந்த நோக்கங்களின் சக்தியை சிறப்பாக வெளிப்படுத்தியது.

எதிர்வரும் மாதங்களில், நாம் ரோட்டரியின் அடிப்படை மதிப்புகளை வழிகாட்டியாகக் கொண்டு ஒன்றிணைந்து பணியாற்றுவோம். நம்முடைய பலம் மற்றும் உறுதியான நம்பிக்கையால் இன்னும் உயர்ந்த சேவைச் சிகரங்களை அடைய முடியும்.

உங்கள் அன்பு நண்பர்,

**Rtn. Er. P. சிவசுந்தரம்**

# தலைமையை உருவாகும் ஒரு கற்றல் தளம்




மாறிக் கொண்டேயிருக்கும் இந்த உலகில் தலைமைத்துவமும் சேவையும்; புதுமையையும் கல்வியையும் நாடுகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக உருவாகியுள்ளதுதான் **Rotary Zones 4, 5, 6 & 7 Master Class –** ரோட்டேரியன்கள் தங்கள் சங்கங்களையும் சமூகத்தையும் வலுப்படுத்த அறிவும் திறனும் பெறும் சிறந்த கற்றல் மேடை.

**கற்றலின் நோக்கம் :**

இந்த **Master Class** தொடர் இந்தியா, இலங்கை, நேபாள், பூடான் மற்றும் மாலத்தீவு ஆகியவற்றைச் சேர்ந்த ரோட்டேரியன்களுக்கு **(Zones 4–7)** மூத்த ரோட்டரி தலைவர்கள் மற்றும் நிபுணர்களிடமிருந்து நேரடியாக கற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் ஒவ்வொரு அமர்வும் உறுப்பினர் வளர்ச்சி, பப்ளிக் இமேஜ், திட்ட அறிக்கைகள், சங்க நிர்வாகம் போன்ற நடைமுறை சார்ந்த தலைப்புகளை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த Master Class நிகழ்ச்சிகள் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 4.15 மணி முதல் 5.30 மணி வரை **(IST)** நடைபெறுகின்றன. இணையதள வழியாக நடத்தப்படுவதால், நாடு முழுவதும் மற்றும் வெளிநாட்டிலும் உள்ள ரோட்டேரியன்கள் எளிதாக கலந்து கொள்ள முடிகிறது.

**அறிவையும் செயல் திறனையும் இணைக்கும் பாலம் :**

ஒவ்வொரு **Master Class-**லும் சங்கங்கள் சிறப்பாக செயல்பட உதவும் நடைமுறைப் பாடங்கள் வழங்கப்படுகின்றன. அமர்வுகளில் நடத்தப்படும் தலைப்புகளில் சில :

✦ தடம் மாறாத உறுப்பினர் வளர்ச்சி

✦ **Rotary.org** மற்றும் **RotaryIndia.org-**ல் திட்டங்களை பதிவேற்றுவது

✦ **Club Monthly Report** உருவாக்குவது

✦ **Board of Directors (BOD)** விவரங்களை புதுப்பிப்பது

பப்ளிக் இமேஜ் மற்றும் நுட்பங்கள்

ஒவ்வொரு அமர்விலும் நேரடி விளக்கங்கள், வெற்றிக் கதைகள் மற்றும் கேள்வி–பதில்கள் இடம்பெறுவதால், கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் கற்றதை உடனடியாக செயல்படுத்தும் தன்னம்பிக்கையைப் பெறுகிறார்கள்.




**தலைவர்களை உருவாக்கும் கற்றல் மேடை :**

**Master Class** தொடர், ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்ற உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சங்க நிர்வாகம் மற்றும் திட்ட அறிக்கைகள் போன்ற சிக்கலான பணிகளை எளிமையாக்கி, சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து, சங்கங்கள் மேலும் திறமையாக செயல்பட உதவுகிறது. இதனால் ரோட்டரியின் "தொடர்ச்சியான கற்றல் மற்றும் சேவையின் வழியே தலைமைத்துவம்" என்ற கலாச்சாரம் வலுவடைகிறது.

**எதிர்காலத்துக்கான தளமாக :**

**Rotary Zones 4–7 Master Class** என்பது ஒரு இணையவழி கருத்தரங்காக மட்டுமல்ல – புத்திசாலித்தனமாகவும் திறமையாகவும் செயல்படும் ரோட்டரி சங்கங்களை உருவாக்கும் இயக்கமாகும். இது ரோட்டரியின் **“Creating Hope in the World”** என்ற நோக்கத்துடன் முழுமையாக ஒத்துப்போகிறது.

டிஜிட்டல் யுகத்திலும் ரோட்டரி தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில், ஆயளவநச ஊடயளள போன்ற முயற்சிகள் ஒவ்வொரு ரோட்டேரியனும் அறிவாற்றலோடும் ஊக்கத்தோடும், சேவைக்கு தயாராக இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

கற்றலிற்கு **CUT'**ஏ கிடையாது, கீழே கொடுக்கப்பட்டுள்ள **Link'**ல் பதிவு செய்து பயனடையுங்கள்.

https://rotaryindia.org/Home.aspx




**புதியதோர் Interact Club of The Indian Public School,**
**சேலம் குகை ரோட்டரி சங்கத்தால் துவங்கப்பட்டுள்ளது.**

# உதவி ஆளுநராகிய நான்...

## Rtn. ஆனந்த் ராஜாமணி



ரோட்டரி மாவட்டம் 2982, மண்டலம் 13-இன் உதவி ஆளுநராக (2025-26) பொருப்புவகிப்பதில் நான் பெருமைகொள்கிறேன்.

### ரோட்டரியில் எனது பயணம்

எனது ரோட்டரி பயணம் 2021-ஆம் ஆண்டு தொடங்கியது. அன்றிலிருந்து, ரோட்டரியின் உயர்ந்த கொள்கைகளான நட்பும், சேவையும் எனக்கு மிகுந்த ஊக்கமளித்து வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், ரோட்டரி ஓசூர் லெஜண்ட்ஸ்'ன் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தக் காலகட்டத்தில் புதிய சங்கத்தை உருவாக்கியதோடு, மண்டலத்தில் சிறந்த தலைவர் விருதையும் பெற்றேன்.

2023-24 ஆம் ஆண்டில், நான் மண்டலச் செயலாளராகப் பணியாற்றினேன். அப்போது மாவட்டத்திற்கும், 'இந்திரவிழா ' மாநாட்டிற்கும் எனது பங்களிப்பைச் செய்தேன். 2024-25-இல், மாநாட்டுப் பதிவிற்கான மண்டல தலைவராகவும் மற்றும் மாநாட்டு கண்காட்சி மேலாண்மைக்கான மாவட்டத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, வெற்றிகரமான, தாக்கமிக்க மாநாட்டை நடத்துவதில் பங்காற்றினேன்.

மேலும், நான் ரோட்டரி லீடர்ஷிப் இன்ஸ்டிடியூட் (RLI)-இன் 3-வது நிலை பாடத்திட்டத்தை முடித்து, எனது தலைமைத்துவத் திறனை மேம்படுத்திக் கொண்டேன்.

### தொழில் மற்றும் சமூகப் பயணம்

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் உதவிப் பொது மேலாளராகப் பணியாற்றுகிறேன். மேலும், விரைவில் தொடங்கவுள்ள **VealthX** என்ற ஸ்டார்ட்அப்பில் பங்குபெறத் தயாராகி வருகிறேன்.

### என் குடும்பம் - என் பலம்

இன்று நான் இந்த நிலையில் இருப்பதற்கு என் குடும்பத்தின் அன்பும் ஆதரவுமே காரணம். எனது மனைவி சுஹாசினி, ஒரு திறமையான மென்பொருள் நிபுணர். எங்கள் மகன் மோஹித் குமார், தற்போது ஓசூர் அசோக் லேலண்ட் பள்ளியில் 12-ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

### இது என்னுடைய பயணம் மட்டுமல்ல

இந்த வெற்றிப் பயணம் என்னுடையது மட்டுமல்ல, என் குடும்பத்தினரின், என் ரோட்டரி நண்பர்களின், மற்றும் சமூக நலனில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரின் பயணமும் ஆகும். என்மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை மதித்து, நன்றியுடனும், உறுதியுடனும் இந்தப் புதிய பொறுப்பை செய்து முடிப்பேன்.

**Rtn. ஆனந்த் ராஜாமணி**
Assistant Governor, Zone - 13
Rotary Club of Hosur Legends

STAR PROJECT

# சேலம் ரோட்டரி சங்கத்தின் சிறப்பு மருத்துவ முகாம்

07.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று, **RI 2982** – சேலம் ரோட்டரி சங்கம் , ராயல் கேர் மருத்துவமனை, கோவை இணைந்து, சமூக நலனைக் கருத்தில் கொண்டு சிறப்பு மருத்துவ முகாம் ஒன்றை வெற்றிகரமாக நடத்தியது.

இந்த முகாமில் 6 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவ உதவியாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தரமான சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.




**பங்கேற்ற மருத்துவ நிபுணர்கள்:**

- ✦ இரைப்பை, குடல் மற்றும் கல்லீரல் நிபுணர்
- ✦ இருதய நிபுணர் மற்றும் இருதய அறுவை சிகிச்சை நிபுணர்
- ✦ நரம்பியல் நிபுணர்
- ✦ நுரையீரல் நிபுணர்
- ✦ எலும்பியல் நிபுணர்

**முக்கிய பரிசோதனைகள்:**

- ✦ **LFT** (கல்லீரல் செயல்பாட்டு பரிசோதனை)
- ✦ **PFT** (நுரையீரல் செயல்பாட்டு பரிசோதனை)
- ✦ **ECG** (இருதய பரிசோதனை)

இந்த முகாம், மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மொத்தம் 117 பயனாளர்கள் இந்த முகாமின் மூலம் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றனர்.

ஒவ்வொருவருக்கும் தலா ₹10,000 மதிப்புள்ள பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மாவட்ட **Signature Project** தலைவர் **Rtn.G.** ரேவதி, சேலம் ரோட்டரி சங்கத்தின் தலைவர் **Rtn. PHF. E.** ராஜேஷ்குமார், செயலாளர் **Rtn.V.** செந்தில்குமார், சிறப்பு திட்டத் தலைவர் **Rtn. PP. M.** செல்வராஜ், சேவைத் திட்ட இயக்குனர் **Rtn. M.** பாலாஜி மற்றும் சங்க உறுப்பினர்களின் முயற்சியால், இந்த முகாம் அப்பகுதியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.







ROTARY CLUB OF SALEM
SERVICE PROJECT 2025-26







# திருப்பூரில் மாநகரில் நடைபெற்ற
# "Rotary Multi District TRF & CSR மாநாடு"

**"Rotary Multi District TRF & CSR** மாநாடு" சிறப்பாக திருப்பூரில் நடைபெற்றது. மாவட்ட ஆளுநர்கள், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், சங்க தலைவர்கள் , செயலாளர்கள் பிற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் பங்கேற்பால், இது ஒரு நினைவுணர்வான விழாவாக அமைந்தது.

இவ்விழாவில் நமது மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்களும், அவருடைய துணைவியார் **Rtn.** சுதா மதிதேவி அவர்களும், RI மாவட்டம் 3203 ஆளுநர் **Rtn.** தனசேகர் அவர்களும், அவருடைய துணைவி **Rtn.** அமுதா தனசேகர் அவர்களும் கலந்து கொண்டனர்.

ஆளுநர்கள் இருவரும் இணைந்து கூட்டத்தை தொடங்கிவைத்தனர், அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

**மாநாட்டில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள் ஊக்கமூட்டும் உரைகள் வழங்கினர்:**

- ✦ **RID Rtn** முருகானந்தம் **M @ MMM** ரோட்டரியின் விரிவாக்கம் குறித்த தன் பார்வையை பகிர்ந்தார்.
- ✦ **TRF** டிரஸ்டி துணைத் தலைவர் டாக்டர் **Rtn.** பாரத் பாண்ட்யா தாக்கம் செலுத்தும் சேவைகள் பற்றி ஊக்கமளித்தார்.
- ✦ **TRF** டிரஸ்டி தலைவர் **Rtn.** ஹோல்கர் க்னாக் உலகளாவிய பார்வையில் ரோட்டரியின் பங்கு குறித்து ஊக்கமூட்டும் உரையாற்றினார்.

இம்மாநாடு **TRF (The Rotary Foundation)** மற்றும் **CSR (Corporate Social Responsibility)** ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, ரோட்டேரியன்களின் நட்பு, ஒற்றுமை மற்றும் சேவையை மேலும் வலுப்படுத்தியது.

இந்நிகழ்வில் நமது மாவட்டம் சார்பாக ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

















கோமரபாளையம் ரோட்டரி சங்கம் தனது சிறந்த பங்களிப்புக்காக **The Rotary Foundation (TRF)** வழங்கும் **Annual Fund Early Achiever Award** விருதைப் பெற்றுள்ளது. இந்தப் பெருமையை, **TRF TRUSTEE** குழுத் தலைவர் **HOLGER KNNACK** அவர்கள் வழங்கினார். சங்கத்தின் 91 உறுப்பினர்களும் தலா **$25** வழங்கி **Annual Fund**-க்கு பங்களித்ததன் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டது.

# International Fellowship Motor Riders - Salem Chapter




சேலத்தில் புதிய உற்சாகத்துடன் ரோட்டரி ரைடர்ஸ் ஃபெலோஷிப் தொடங்கப்பட்டுள்ளது. மொத்தம் 27 உறுப்பினர்களுடன் மோட்டார் சைக்கிள் ஓட்டத்தில் ஆர்வமுள்ள ரோட்டேரியன்களை ஒன்றிணைத்து, சமூக சேவை மற்றும் நட்பை மேம்படுத்தும் ஒரு தனித்துவமான முயற்சியாக கடந்த செப்டம்பர் 13ம் தேதி, ரோட்டரி ஹால், சஹாதேவபுரம், சேலத்தில் சாசனம் மற்றும் பொறுப்பேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாவட்ட ஆளுநர் **Rtn. Er.P.** சிவசுந்தரம் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், **IFMR International Secretary Rtn.** எஸ்.ஜே. பிரசாந்த் பாபு மற்றும் **IFMR** – இந்தியா தலைவர் Rtn. விஜய் மேனே ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்றனர்.

இந்த ஃபெலோஷிப் மூலம் உறுப்பினர்களுக்கிடையே நட்பு மற்றும் ஒற்றுமையை வலுப்படுத்துவது, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது, ரோட்டரியின் பண்புகள் மற்றும் சமூக சேவையை புதுமையான முறையில் பரப்புவது என உறுதியளித்தனர்.

சாசன உறுப்பினர்களான **Rtn. G.** தினேஷ், தலைவர், **Rtn. P.S.** மோகன் செயலாளர், **Rtn. P.** சிவகுமார் பொருளாளர் மற்றும் பிற உறுப்பினர்களுடன் ரோட்டரியின் அடிப்படை பண்புகளான நட்பு, சேவை மற்றும் சமூக பங்களிப்பை, மோட்டார் சைக்கிள் ஓட்டத்தின் உற்சாகத்துடன் இணைத்து தனது பயணத்தை சிறப்பாகத் தொடங்கினர்.



# குறுக்கு எழுத்துப் போட்டி



திரைப்படப் பாடல்களின் முதல் சொற்களைக் கொண்டு இந்தப் புதிரை அமைத்திருக்கிறேன்.

**இடமிருந்து வலம் :**

1. என் உள்ளம் மயங்கும்படி இந்த ஓவியம் என்னென்னவோ சொல்லுதடி! (5, 4)
12. அழகிய வேலனே, (4)
14. 2000 ரூபாய் தாளில் பாதி அளவிற்கு பா.ஜ.க.வின் சின்னம் (4, 3)
22. பேரின்பம் தரும் பழந்தமிழ் இசைக்கருவியை வாசிக்கிறாள் மகள் (4, 2)
24. காதலனே/காதலியே,

**மேலிருந்து கீழ் :**

1. ரோஜாவுக்குத்தான் எத்தனை எத்தனை விருப்பங்கள்! (3, 3, 2)
2. ஹலோ ஹலோ நலமா?
3. ஹாங்காங் லேடி டிகிரி படித்த குழப்பத்தில் ஹாஸ்யம் மறந்துபோய் ஆடிப் பாடுகிறாள் (4, 4)
7. குற்றமற்ற ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சமான மெய்யன்பே! (3)
8. செம்மலரே! உன்னைக் காண எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும் என்பது கங்கை அமரனுக்குத்தான் தெரியும் (7)
11. பெண்களை உவமைகளால் வர்ணித்து வர்ணித்துக் கவிச்சக்கரவர்த்தியே சறுக்கிவிட்டான்! (4, 5)
18. அன்பானவனே! என் விழியை பம்பாயில் இழந்துவிட்டேன். (5)

**இடமிருந்து வலம் மற்றும் மேலிருந்து கீழ் இணைந்த சொற்கள் :**

4 & 6 (மேலிருந்து கீழ்). கேரள எல்லையில் நுழைந்த தமிழ்க் குருவிக்கு ஒரே கொண்டாட்டந்தான்

9 & 21 (மேலிருந்து கீழ்).. இந்த இளம் பருவத்தில் ஏதோ ஒரு காட்சி தோன்றுதடி (6, 4)

10 & 17 விசில் அடிக்க வருவாயா பாட்டி? (3, 2)

15. & 19 காசை சுண்டிவிட்டால்

16 & 23. கீழடி நாகரிகத் தொட்டிலில் தர்மத்தின் தலைவன் (5, 4)

20 & 25. விழியே! கண்ணதாசனின் கடைசி வரியே! (3, 2, 2)

5. (மேலிருந்து கீழ்) & 13 (மேலிருந்து கீழ்). ரோஜா பூத்திருக்கும் விலாசம் மோகனுக்குத் தெரிய வேண்டுமாம் (2, 4)

**இதற்கு விடை இதே பதிப்பில் ஒரு பக்கத்தில் உள்ளது.**

# புதிய உறுப்பினருக்கான மாவட்ட கருத்தரங்கம் "சங்கல்பம்"

புதிய உறுப்பினருக்கான மாவட்ட கருத்தரங்கம் "சங்கல்பம்" எனும் மாவட்ட உறுப்பினர் கருத்தரங்கம் 14 செப்டம்பர் 2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சேலம் வின்சர் கேஸில் ஹோட்டலில் நடைபெற்றது. சேலம் சவுத் சங்க தலைவர் **Rtn.** எஸ்.வி. பிரவீன் கூட்டத்தைத் தொடங்கினார்.

மதிப்புக்குரிய விருந்தினர்களை கௌரவித்தல் மற்றும் மாவட்ட **GML** "வணக்கம் ரோட்டரி" (செப்டம்பர் மாதம், இதழ் எண் 3) வெளியீடு இடம்பெற்றது.

மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் நிகழ்வின் தொடக்க உரையை வழங்கினார். தொடர்ந்து உறுப்பினர் தலைவர் **Rtn. Dr.** ராஜேஷ் மற்றும் புதிய உறுப்பினர் ஓரியண்டேஷன் தலைவர் **Rtn. P.** செல்வம் உரையாற்றினர். புதிய சங்கங்களை தொடங்கியதும், 25-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை இணைத்தும் சாதனை படைத்த சங்கங்கள் மற்றும் ரோட்டேரியன்கள் **PHF** விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் மற்றும் தலைவர்கள் வழங்கிய ஓரியண்டேஷன் பயிற்சி அமர்வுகள், ரோட்டரி இணையதளம் **(rotary.org)** பயன்படுத்தும் வழிகள், வரவிருக்கும் "அழகோவியம்" மாவட்ட மாநாட்டை பற்றிய விரிவுரை, மற்றும் **PELS & SELS 2026** – "கற்க கசடற" அறிவிப்புகள் நிகழ்வின் சிறப்பு அம்சங்களாக அமைந்தன.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக **JCI** செனட்டர் ஆர். எஸ். பிரபு வழங்கிய ஊக்க உரை அமைந்தது. அதன் பின்னர் ரோட்டரி வினாடி வினா, பங்கேற்பாளர்களின் கருத்துக்கள், மற்றும் ஏற்பாடு செய்த சங்கத்தினர்க்கு கௌரவிப்பு நிகழ்ந்தது. **PDG . Rtn.** தர்மேஷ் படேல் நிறைவுரை வழங்கினார். **Rtn. M.** அன்னல் நன்றியுரையைச் சொல்லி கூட்டத்தை முடித்தார்.


















"வணக்கம் ரோட்டரி" செப்டம்பர் மாதத்திற்கான மூன்றாவது இதழ் **PDG**-க்கள் முன்னிலையில் மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் வெளியிட்டார்.



# சில எளிய வீட்டு குறிப்புகள்....! 5



- ✦ இரவில் படுப்பதற்கு முன் ப்ளீச்சிங் பவுடரைச் சிறிது எடுத்து கழிப்பறையிலும் குளியலறையிலும் தூவி விட்டு அப்படியே விட்டு விட வேண்டும். கரப்பான் பூச்சித் தொல்லை இருக்காது.
- ✦ தேங்காய் மூடியை தண்ணீரில் வைத்தால் அல்லது மூடியில் சிறிது உப்பை தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.
- ✦ வீட்டு ஜன்னல்களுக்கு கரும் பச்சை, கருநீலத்தினால் ஆன திரைச் சீலைகளைப் பயன்படுத்தினால் வெயிலின் உஷ்ணம் உள்ளே வராது.
- ✦ சமைக்கும் போது எரிபொருள் சிக்கனம் செய்ய, கீரையைத் தவிர எது சமைத்தாலும் பாத்திரத்தை மூடி வையுங்கள்.
- ✦ மொசைக் தரையில் அழுக்கு நீங்கி பளபளப்பாக இருக்க, வெதுவெதுப்பான நீரில் கொஞ்சம் சாக்பீஸ் தூள் மற்றும் சலவை சோடா கலந்து ஸ்பாஞ்சை வைத்து துடைத்து, பிறகு நல்ல தண்ணீரில் மீண்டும் ஒரு முறை துடைக்க வேண்டும்.

**Ann. Priyanka**
W/o. Rtn. Silambarasan, RC Salem Phoenix

**இது போன்ற வீட்டு குறிப்புகளை தாங்களும் இப்பகுதியில் பகிரலாம்...**




புதியதோர்
**Rotaract Club of SKS Nursing College, Salem Galaxy**
ரோட்டரி சங்கத்தால் துவங்கப்பட்டுள்ளது.

# அக்டோபர் மாத ரோட்டரி தலைப்பு :

## “பொருளாதார மற்றும் சமூக முன்னேற்ற மாதம்”




ரோட்டரி நாட்காட்டியில் அக்டோபர் மாதம் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் உள்ளூர் பொருளாதாரங்களை வலுப்படுத்தவும், தனிநபர்களுக்கு அதிகாரமளிக்கவும், சமூகங்களை உயர்த்தும் வாய்ப்புகளை உருவாக்கவும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

வறுமை என்பது மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று என்பதை ரோட்டரி உணர்கிறது. கல்வி, திறன்கள் மற்றும் ஆதாரங்கள் இல்லாமல் சமூகங்கள் முன்னேற்றம் அடைய முடியாது. நீடித்த திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைகள் வழியாக, ரோட்டரி; தொழில் முனைவோரை ஊக்குவித்து, சிறு தொழில்களை ஆதரித்து, தொழில்வாழ்வு பயிற்சிகளை வழங்கி, மக்களின் வாழ்க்கையை மாற்றி வருகிறது.

இந்த மாதம், நாம் மாற்றத்தின் ஊக்குவிப்பாளர்களாக இருக்க வேண்டிய பொறுப்பை நினைவூட்டுகிறது. சுயநம்பிக்கை மற்றும் திறன் மேம்பாட்டை மையமாகக் கொண்டு செயல்படுவதன் மூலம், நீடித்த மற்றும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். சிறு கடன் திட்டங்கள், பெண்கள் அதிகாரமளிப்பு முயற்சிகள், வேலை வாய்ப்பு கண்காட்சிகள், இளைஞர் திறன் பயிற்சிகள், நிதி, கல்வி பட்டறைகள் ஆகியவைகளை சமூகங்களை வலுப்படுத்துவதில் நமது சங்கங்கள் பங்களிக்கும் வழிகளில் சில.

பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் என்பது வெறும் நிதி வளர்ச்சி அல்ல, அது மரியாதை, சமத்துவம் மற்றும் நம்பிக்கை பற்றியது. வளர்ச்சி அடைந்த சமூகங்கள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன; முன்னேற்றம் உள்ளடக்கியதாகவும் நீடித்ததாகவும் உறுதி செய்கின்றன.

இந்த மாதத்தை கொண்டாடும் வகையில், நாம் ரோட்டரியின் குறிக்கோளுக்கு மீண்டும் உறுதிமொழி எடுப்போம்:

- ✦ வாய்ப்புகளை உருவாக்க,
- ✦ சமூகங்களை வலுப்படுத்த,
- ✦ ஒவ்வொரு நபரும் செழிக்கக் கூடிய உலகத்தை கட்டியமைக்க.

ரோட்டரியின் கோட்பாட்டின் வழிகாட்டுதலோடு, நாம் ஒன்றிணைந்து வளர்ச்சியை ஊக்குவித்து, சமூகங்களை மாற்ற முடியும்.

# எனது நூலகம்




மனதிற்கும் உடலுக்கும் உள்ள உறவை, அதன் பிரிணாமங்களை தனக்கே உரிய பாணியில் தனது ஆழ்ந்த அறிவையும், பரந்த அனுபவத்தையும் மேல்நோக்கி எளிய தமிழில் இனிய முறையில் எடுத்துரைக்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

நாளைய சமூகத்தின் சீர்பாதியில், மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணிகளையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும், நோய்களையும் பற்றி அறிவியல் கண்ணோட்டத்தோடு இயல்பாக விவரிக்கப்பட்டுள்ளது. அதோடு நிலவும் மன அழுத்தத்தை குறைப்பதற்கான வழிமுறைகளையும் நமக்கு சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர் டாக்டர் மோஹன வெங்கடாசலபதி. குறிப்பாக, நாம் கடைப்பிடிக்க வேண்டிய சிறிய பழக்கவழக்கங்களின் ஏற்படும் விளைவுகள், தற்காலத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் கல்விச்சுமை, பெற்றோரின் எதிர்பார்ப்பு, சமூக அழுத்தம் போன்றவை, அவர்களின் மனநலத்திற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனை சமநிலைப்படுத்தும் திறனே ஆரோக்கியமான வாழ்வின் அடித்தளம் என்பதை இப்புத்தகம் பறைசாற்றுகிறது.

மனநோயினால் சமூகத்தில் மக்களிடையே உள்ள தவறான கண்ணோட்டங்கள், மன அழுத்தம் மற்றும் மன நலம் பற்றிய விழிப்புணர்வு கட்டுரைகள், சொற்பொழிவுகள், தீர்வுகள் ஆகியவையும் சமூதா முன்னேற்றம் பெற உதவுகின்றன.

விளக்கமாகப் படித்து முடித்தபின் ஆழமான எண்ணம் மிளிரச்செய்யும் மனநலக் கட்டுரை இது. தீர்க்கமான சிந்தனையையும் நல் வாழ்வையும் ஊட்டும் நன்நூல் இது.

என்றும் ரோட்டரி சேவையில்,
**Rtn. Hemanth**
**RC Salem Phoenix**

**இது போன்று உங்களுக்கும் உங்கள் விருப்பமான புத்தகத்தை பற்றி இங்கு பகிரலாம்.**

# “மாவட்டத்தின் ஆளுநரின் அதிகாரப்பூர்வ விஜயம்”




**RC Hosur Grand**



**RC Hosur Lake View**




**RC Thiyagathurgam**




**RC Salem East**




**RC Harur**




**RC Salem Cosmos**

## குறுக்கெழுத்து போட்டிக்கான விடை

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி[1] | த் | தி | ர | ம் | பே | சு[2] | த | டி[3] | ■ | ம[4] | லை | யா[5] | ள | ■ |
| ன் | ■ | ■ | ■ | ■ | ■ | க | ■ | ங் | ■ | ■ | ■ | ர் | ■ | க[6] |
| ன | ■ | ■ | ■ | மா[7] | ■ | மா | ■ | கி | ■ | செ[8] | ■ | ■ | ■ | ரை |
| சி[9] | ன் | ன | ஞ் | சி | று | ■ | ■ | ரி | ■ | ந் | ■ | வா[10] | ரா | யோ |
| ன் | ■ | ■ | ■ | ளா | ■ | ■ | ■ | டி | ■ | தூ | ■ | ■ | ■ | ர |
| ன | ■ | ■ | கு[11] | ■ | ■ | ■ | சி[12] | ங் | கா | ர | ■ | வீ[13] | ■ | ம் |
| ஆ[14] | யி | ர | ம் | தா | ம | ரை | ■ | கா | ■ | ப் | ■ | ட் | ■ | ■ |
| சை | ■ | ■ | ப | ■ | ■ | ■ | ■ | லே | ■ | பூ[15] | மு | டி | ச் | சு |
| ■ | ■ | தெ[16] | ன் | ம | து | ரை | ■ | ■ | ■ | வே | ■ | ல் | ■ | ■ |
| தோ[17] | ழா | ■ | ஏ | ■ | ■ | ■ | ■ | ■ | க[18] | ■ | ■ | ■ | ■ | ■ |
| ழி | ■ | ■ | ரா | ■ | ■ | தா[19] | ■ | கு[20] | ண் | லோ | ச | லை | ■ | வ[21] |
| ■ | ஆ[22] | ன | ந் | த | யா | ழை | ■ | ■ | ணா | ■ | ■ | ■ | ■ | ய |
| ■ | ■ | ■ | தூ | ■ | ■ | யா | ■ | ■ | ள | ■ | வெ[23] | ளே | ந | றி |
| ■ | ■ | அ[24] | ன் | பே | ■ | ம் | ■ | மா[25] | னே | ■ | ■ | ■ | ■ | ல் |



# டயாலிசிஸ் இயந்திரங்களை அர்ப்பணிக்கும் விழா

2025 செப்டம்பர் 4 ஆம் தேதி நாமக்கல்லில் உள்ள யுனைடெட் வெல்ஃபேர் டிரஸ்டிற்கு 6 டயாலிசிஸ் இயந்திரங்களை அர்ப்பணிக்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த மானியத்தை மிகக் குறுகிய காலத்திலேயே தலைவர் **Rtn.** நெஹில்ராஜ், இயக்குனர் **Rtn.** விஸ்வநாதன் மற்றும் **RC Madras** சங்கத்தினர் நிறைவேற்றினர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக நமது மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் அவர்கள் பேசுகையில் ;

இந்த முழு செயல்முறைக்கும் முதன்மை காரணமாக இருந்து வழிகாட்டிய **PDG Rtn. J.** ஸ்ரீதர் அவர்களுக்கு சிறப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டம் 2982 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட சங்கங்களின் ஆதரவுடன் இத்தகைய அர்த்தமுள்ள, மகிழ்ச்சியூட்டும் மானியத்தை நிறைவேற்றியதில் பேறானதமும் பெருமையும் கொள்கிறேன், என்றார் .












## Dist. First Lady Message



அன்புள்ள ரோட்டரி குடும்பத்தினருக்கு,

சமீபத்தில், நமது ரோட்டரி சேவைத் திட்டங்களில் ஒன்றின்போது சில குழந்தைகளுடன் நேரம் செலவிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்களின் பளிங்கு சிரிப்புகள், முடிவில்லா ஆர்வம், குற்றமற்ற கனவுகள், நாம் ஏன் சேவையாற்றும் இடத்தில இருக்கிறோம் என்பதை எனக்கு நினைவூட்டினஶ்ரீ நாம் செய்யும் ஒவ்வொரு சேவையிலும் உண்மையான காரணம் நம்பிக்கை, வாய்ப்புகள் மற்றும் மகிழ்ச்சியை வழங்குவதே நமது பிரதான நோக்கமாகும்.

மாவட்டத்தின் முதல் பெண்மணியாக, நான் ரோட்டேரியன்களின் மற்றும் அவர்களின் குடும்பங்களின் அமைதியான வலிமையும் கருணையையும் பார்த்துள்ளேன். இந்த தன்னலமற்ற சேவை யே ரோட்டரியை தனித்துவமாக்குகிறது.

எனது இம்மாதச் செய்தி மிகவும் எளிமையானது: உங்கள் சேவையின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்கள் தாக்கத்தின் முழுப் பரிமாணத்தை நீங்கள் அறியாமல் போகலாம், ஆனால் எங்கோ யாரோ ஒருவர், உங்கள் முயற்சிகளால் இன்று ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்கிறார். நாம் கருணையுடன் சேவை செய்து, நம்பிக்கையுடன் ஊக்கமளித்து, அன்புடன் வழிநடத்துவோம்.

நன்றியுடனும் பாராட்டுடனும்,

**Rtn. MD. G.K. சுதாமதிதேவி**



# சங்க திட்டங்கள்



**RC ATTUR MIDTOWN**
Nation Builder Award



**RC HOSUR LEGENDS**
Nation Builder Award



**RC KALLAKURICHI**
Nation Builder Award



**RC MAA NAGAR KRISHNAGIRI**
Kho Thanam Project



**RC NAMAKKAL EVERGREEN CITY**
Nation Builder Award



**RC RASIPURAM**
Educational Aid



**RC RASIPURAM ROYAL**
Nation Builder Award



**RC SALEM**
Mega Medical Camp

# சங்க திட்டங்கள்



**RC SALEM ELITE**
UPS Donated to Old Age Home




**RC SALEM GUGAI**
Nation Builder Award



**RC SALEM GYMKHANA**
Nation Builder Award




**RC SALEM JUNCTION**
Nation Builder Award




**RC SALEM METROPOLIS**
Nation Builder Award



**RC SALEM METROPOLIS**
Flax Exchange




**RC SALEM MIRACLE**
Donated Marriage things to New Couple




**RC SALEM RUPAVATI**
Nation Builder Award

# சங்க திட்டங்கள்



**RC SALEM SUCCESS**
Nation Builder Award



**RC SALEM TEXCITY**
Nation Builder Award



**RC SALEM WINGS**
Flag Exchange with RC Theni



**RC SALEM WONDERFUL**
Mega Medical Camp



**RC SALEM YOUNG TOWN**
Nation Builder Award



**RC SANKARAPURAM**
Blood Donation Camp



**RC TIRUCHENGODE SANGAMAM**
Donated Sports Materials



**RC ULUNDURPET**
Nation Builder Award



**RC VILLUPURAM**
**Nation Builder Award**



**RC YERCAUD**
**Nation Builder Award**

# ROTARY INTERNATIONAL CONVENTION

இப்போது தாய்பே நேரம் வந்துவிட்டது! உலகத் தரமான நிகழ்வை உங்களுக்கு வழங்கும் பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. சிறந்த பேச்சாளர்கள், ஆச்சர்யங்கள், அநேக நிகழ்வுகள் என்று பல அனுபவங்கள் உங்கள் வருகையை மறக்க முடியாததாக மாற்றும். ஒவ்வொரு ரோட்டரியனும் குறைந்தது ஒருமுரையாவது அனுபவிக்க வேண்டிய இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுங்கள்.

பாரம்பரியம் மற்றும் நவீன கலாச்சாரம் அழகாக கலக்கும் தாய்பே நகரில் நடைபெறும் 2026 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் புதிய உறவுகளை உருவாக்கி, மறக்க முடியாத நினைவுகளைப் படைக்குங்கள்.

நல்லதிற்காக ஒன்றுபடுங்கள் – 2026 ஜூன் 13 முதல் 17 வரை தாய்வானின் தாய்பே நகரில் நடைபெறும் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டிற்கு பதிவு செய்யும் விவரங்கள் ;

- டிசம்பர் 15'குள் பதிவு செய்வோருக்கு 475 அமெரிக்கன் டாலரும்,
- டிசம்பர் 16 முதல் மார்ச் 31க்குள் பதிவு செய்வோருக்கு 575 அமெரிக்கன் டாலரும்,
- அதற்கு மேல் பதிவு செய்வோருக்கு 675 அமெரிக்கன் டாலரும் ஆகும், ஆதலால் விருப்பமுள்ளோர் உடனடியாக பதிவு செய்து பலன் பெறவும்.





Rtn. Francesco Arezzo
RI President

Rotary | UNITE FOR GOOD | TEAM UNIQUEZ | Rotary Club of Salem Texcity

ROTARY INTERNATIONAL DISTRICT 2982



Rtn. Er. P. Sivasundaram
District Governor, 2025 - 26

# CLUB ADMINISTRATION & ENVIRONMENTAL PROTECTION SEMINAR




Date : 26.10.2025, Sunday

Time : 9.00 am onwards

Venue : Lions Convention Centre, Yercaud

*Organized by*

## ROTARY CLUB OF SALEM TEXCITY

RI Dist. - 2982 | Chartered on 30.07.2003 | Club No. 63034 | Zone - 21



**Rtn. PHS. MANOJ PILLAI**
District Club Administration Chair 2025 - 26



**Rtn. MD Hero N. SENTHILKUMAR**
District Environmental Chair 2025-26

**Rtn. MPHF R. SURIYANARAYANAN**
Event Chairman

**Rtn. PHF R. PALANISAMY**
Event Secretary

**Rtn. PHF P.S. RANGASAMY**
Event Co-Chair

**Rtn. PHF. GOUTHAMANVEL**
Event Treasurer

**Rtn. PHF R.S. BOOPATHY**
President 2025-26, RC Salem Texcity

**Rtn. PHF C. ANBU SEKARAN**
Secretary 2025-26, RC Salem Texcity

**Rtn. P. SIDHURAJ**
Treasurer 2025-26, RC Salem Texcity

Scan here for Registration Payment

For More Details Pls. Contact : **93621 01467, 93608 35414**

Note
1. Last Date of Registration 20.10.2025
2. Spot Registration will not be accepted
3. Morning Breakfast (upto 10.00 am) and Lunch will be provided.

# "அழகோவியம்" மாவட்ட மாநாட்டிற்கான மண்டலம்-4 கலந்தாய்வு கூட்டம்

“அழகோவியம்" மாவட்ட மாநாட்டிற்கான மண்டலம்-4 கலந்தாய்வு கூட்டம் கடந்த செப்டம்பர் மாதம் 10ஆம் தேதி வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் மண்டலங்கள் 11, 12, 13, மற்றும் 14 சார்ந்த சங்க தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம், **PDG Rtn.** தர்மேஷ், **Conference Promotion Chairman** சுரேஷ்குமார், மற்றும் **Conference Registration Chairman Rtn.** விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பெருமை சேர்த்தனர். கூடுதலாக, மாவட்ட அதிகாரிகள் **Rtn.** ரஞ்சனா பட்டேல், **Rtn.** கார்த்திகேயன், **Rtn.** சுதாகர் மற்றும் **Rtn.** கிருஷ்ணன் ஆகியோரும் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களின் கருத்துக்களை பகிர்ந்தனர்.

இந்த நிகழ்வை உதவி ஆளுநர்கள் **K.** பாலசுப்ரமணியன் (மண்டலம் 11), **KM.** பிரசன்னா (மண்டலம் 12), ஆனந்தராஜமணி (மண்டலம் 13) மற்றும் **L.** பிரதீப் (மண்டலம் 14) சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.








# கேள்வி களஞ்சியம்




கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை டிக் செய்து 9894698936 இந்த எண்ணிற்கு **Whatsapp** செய்வோர் அடுத்த இதழில் அவர்களின் பெயரை "வெற்றி வாசகர்" என்று கௌரவிக்கப்படுவர்.

1. மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் அவர்களின் ப்ரெத்தியேக உரையில் எதனை மையப்படுத்தி பேசியுள்ளார் ?

   1) சங்கங்களின் சேவை மற்றும் செயல்பாடுகள் 2) தீபாவளி பண்டிகை பற்றி
   3) நமது உடல் நலம் பற்றி 4) இயற்கையை பற்றி

2. **Rotary Multi District TRF & CSR** மாநாடு எங்கு நடந்தது

   1) சேலம் 2) சென்னை 3) திருப்பூர் 4) ஈரோடு

3. நாமக்கல்லில் உள்ள யுனைடெட் வெல்ஃபேர் டிரஸ்டிற்கு எத்தனை டயாலிசிஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டன .

   1) 1 2) 5 3) 6 4) 3

4. **Club Administration Seminar** எங்கு நடக்கவுள்ளது?

   1) ஏற்காடு 2) சேலம் 3) நாமக்கல் 4) குமாரபாளையம்

5. மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் அவர்கள் கடந்த மாதத்தில் மட்டும் எத்தனை **GOV'**ஐ முடித்துள்ளார்

   1) 7 2) 6 3) 5 4) 4

6. **New Member Oriendation Seminar** எந்த சங்கம் முன்னெடுத்து நடத்தியது ?

   1) **RC Salem** 2) **RC Yercaud** 3) **RC Gymkhana** 4) **RC Salem South**

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் இந்த இதழில் இருந்தே எடுக்கப்பட்டவை**

*"As a Rotarian i do what when i can - where i can"*

"என்னால் இயன்றதை இயன்ற நேரத்தில் செயல்படுத்துவேன் ஒரு ரோட்டேரியனாக"

## சென்ற மாத கேள்வி களஞ்சியத்தின்

### வெற்றி வாசகர்கள்



**Ann. Vallinayagi**
RC Hosur Rose City



**Rtn.KGS. Nagaraj**
RC Elampillai



**Rtn. P. Kannan**
RC Rasipuram



**Rtn. Pyramid K.Ramesh**
RC Attur



**Rtn. Eswaramoorthy**
RC Salem



**Rtn. Hari**
RC Attur Midtown



**Rtn. V. Senthil Kumar**
RC Idappadi



**Rtn.S.R. Rajasubramanian**
RC Salem Metropolis


Christy



Nalaas

சத்துமாவு

Christy Group of Companies

A-2, A -3, SIDCO Industrial Estate, Andipalayam,
Tiruchengode - 637 214, Namakkal District. Tamil Nadu. INDIA.

: 04288 288900 info@christygroup.in www.christyfoods.in

Christy Quality Foods (I) Pvt Ltd

44/1, Bhavani By Pass Road,Chithode, Erode - 638102 For Enguires : 0424 2533150, 2533151

ROTARY INTERNATIONAL DISTRICT 2982

Rotary | UNITE FOR GOOD | TEAM UNIQUE



Rtn. Paul Harris
Founder of Rotary



Rtn. Francesco Arezzo
RI President



Rtn. Er. P. Sivasundaram
District Governor



Rtn. AKS. Prof. Dr. A.K. Natesan
Chairman



Rtn. K. Sivakumar
President



Rtn. C. Panneerselvam
Secretary



Rtn. C. Senthilkumar
DGE, RI Dist. 2982

## ROTARY INTERNATIONAL DISTRICT 2982

# PROPOSED CONVENTION CENTRE

## MULTI UTILITY HALL / VOCATIONAL SERVICE CENTRE

**Location : Sankagiri**

| Rupees 10 Lakhs | Rupees 5 Lakhs | Rupees 2 Lakhs | Rupees 1 Lakh |
|---|---|---|---|
| Founder Trustee | Executive Trustee | Trustee | Member |




Rotary
Dist.2982
TEAM UNIQUE
ரோட்டரி மாவட்ட மாநாடு 2025
அழகோவியம்
2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025
Organised by...
ROTARY CLUB OF KOMARAPALAYAM
DATE
26, 27, 28
DECEMBER 2025
FOUR POINTS
BY SHERATON
RESORT & CONVENTION CE
MAHABALIPURAM
REGISTER NOW
https : //rotary2982.org/conference_registration/
Rtn. Paul Harris
Founder of Rotary
Rtn. Francesco-Arezzo
Rotary International President, 2025 - 26
Rtn. Er. P. Sivasundaram
District Governor, 2025 - 26
Rtn. Minnal N. Kandasamy
Conference Chairman
Rtn. Dr. N. Mathan Karthick
Conference Secretary
Advisors
Rtn. K. Inbaraj
Rc of Salem Central
Rtn. D. K. Sivakumar
Rc of Salem South
Rtn. R.R. Prasad
Rc of Redrock
Rtn. K. P. Saravanan
Rc of Namakkal Heritage
Conference Promotion Committee
Rtn. S. Sureshkumar
RC of Namakkal Poultry Town
Chairman
Rtn. C. Sampathkumar
RC of Jalakandapuram
Regional Chairman
Rtn. D. Rajkumar
RC of Namakkal
Transport City
Regional Chairman
Rtn. N. Sudhakaran
RC of Sankarapuram
Regional Chairman
Rtn. Dollars Manjunath
RC of Hosur Midtown
Regional Chairman
Rtn. T. Eswarakumar
RC of Salem
Regional Chairman
Conference Registration Committee
Rtn M. Viswanathan
RC of Mohanur
Chairman
Rtn S.Jaiganesh
RC of Tiruchengodu Redrock
Regional Chairman
Rtn. C. Sengottuvelu
RC of Namakkal Evergreen City
Regional Chairman
Rtn. J. Natarajan
RC of Chinnasalem
Regional Chairman
Rtn. R. Sudharsan
RC of Hosur Sipcot
Regional Chairman
Rtn. M.Kesavaraj
RC of Salem Phonenix
Regional Chairman




Owned, Published & Printed by **P.JAGADEESH** Published from NO.11/16, CALICUT MAIN ROAD, NALLAPPAN THOTTAM, JARI KONDALAMPATTY, SALEM,TAMIL NADU - 636010
Printed at **SEAMAN GRAPHICS,** 7/253,K.V.N. Puram 2nd Street, Kilpauk Garden, Chennai - 600010.
Editor : **P.JAGADEESH**

STAY & Meeting @ SALEM

Rotary

RMB

SELVAMATHI
FARM RESORTS

# Selvamathi Farm Resorts

✦ Meeting Hall ✦ Luxury Rooms ✦ Swimming Pool ✦ Loving Pets ✦ Natural Studio
✦ Rainshower ✦ Party Lawn ✦ Village huts ✦ 250 Varieties of Trees








Masinaikenpatti (PO), Ayothiyapattanam (Via), Salem-636103.

For Bookings 99525 09812

# Excel® GROUP INSTITUTIONS

Approved by AICTE, CoA, NCTE, AYUSH, NCH, NCISM, PCI, TNNMC, NCVT, New Delhi &
Affiliated with Anna University & DoTE, The TN Dr. M.G.R. Medical University, DPH, TNTEU, Chennai, Periyar University, Salem

**ENGINEERING - AUTONOMOUS**

B.E. | B.TECH. - SAFETY & FIRE | AGRI | AERO | BIOMEDICAL | CIVIL | MECH | CSE | EEE
ECE | FOOD TECHNOLOGY | IT | PETROCHEMICAL | ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE
ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
COMPUTER SCIENCE & BUSINESS SYSTEMS | M.E. - ALL BRANCHES
Ph.D. - CSE | ECE | MECH | PHYSICS
M.Tech. - CSE - 5 Years (After+2)

A+ NAAC | NBA | 2634 Counselling Code

**3/2 YEARS DIPLOMA COURSES**

AUTO | MECH | CIVIL | ECE | EEE
COMPUTER ENGINEERING | MEDICAL LAB TECHNOLOGY
TECHNICIAN X-RAY TECHNOLOY

**BUSINESS SCHOOL - AUTONOMOUS**

M.B.A. | M.C.A. - 2 Years (After Degree)
M.B.A. - 5 Years (After+2)

**ARCHITECTURE** — Counselling Code 2667

B.ARCH. | M.ARCH.

**EDUCATION**

B.Ed. | M.Ed.

**COMMERCE & SCIENCE**

B.A. - TAMIL, ENGLISH | B.Com. | B.Com. - CA | B.Com. - AF | B.Com. - PA | B.Com. - IT
B.B.A. | B.Sc. - BIOCHEMISTRY | COMPUTER SCIENCE | MICROBIOLOGY | DATA SCIENCE
VISUAL COMMUNICATION | COSTUME DESIGN & FASHION | TEXTILE & FASHION DESIGNING
ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE | CYBER SECURITY | INFORMATION TECHNOLOGY
CLINICAL LABORATORY TECHNOLOGY | ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
B.C.A. | M.Com. | M.A. ENGLISH | M.Sc. - MICROBIOLOGY | COMPUTER SCIENCE
TEXTILE & FASHION DESIGNING | M.S.W.

1103 Offers | 1004 Students Placed

**B.H.M.S.**
**B.S.M.S.**
**B.N.Y.S.**

Naturopathy & Yoga - NEET Not Neceesary

PHARM.D.
M.PHARM. Pharmaceutics Pharmacy Practice
B.PHARM. | D.PHARM.
B.P.T. - PHYSIOTHERAPY
B.O.T. - OCCUPATIONAL THERAPY*
B.Sc. - NURSING (Male / Female)
GNM | HEALTH INSPECTOR
B.Sc. - R.I.T. | M.L.T.

NH-544, Salem - Coimbatore Highway, Komarapalayam - 637 303
+91 98427 13789
excelinstitutions.com

# தி காவிரி கல்வி நிறுவனங்கள்

மேச்சேரி, சேலம் - 636 453.

ACCREDITED WITH GRADE A+ CGPA: 3.43 NAAC

**பொறியியல் கல்லூரி (Autonomous)**

**B.E.**

- Biomedical Engineering
- Civil Engineering
- Computer Science Engg.
- Electrical & Electronics Engg.
- Electronics & Communication Engg.
- Mechanical Engineering

Counselling Code 2625

**B.Tech.**

- Artificial Intelligence and Data Science
- Information Technology
- Chemical Engineering
- Agricultural Engineering

**பாலிடெக்னிக் கல்லூரி**

- Medical Laboratory Technology
- Artificial Intelligence & Machine Learning
- Agricultural Engineering
- Fire Technology and Safety
- Chemical Engineering
- Civil Engineering
- Mechanical (T&D) Engg.
- Computer Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronics Engg.
- Electronics & Commun. Engg.

**B.Ed. & M.Ed.**

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

B.A. - Tamil - English BCA BBA
B.Com. (CA) B.Com. M.Com.
B.Sc. - Chemistry - Microbiology - Computer Science - Nutrition and Dietetics
M.Sc. - Computer Science (AI & DS) - Microbiology

**NURSING COLLEGE**
B.Sc. - Nursing | DGNM
**PHARMACY COLLEGE**
B.Pharm | D.Pharm
**PHYSIOTHERAPY COLLEGE**
**HEALTH SCIENCE**

95249 36156

INSHA, 9894640139





Rtn. So. Kannan
District Publication Chair
Cell : 94431 88896





Rtn. M. Shanavas
District Publication Co-Chair
Cell : 98946 40139





Rtn. S. Hemanth
District GML Chair
Cell : 98946 98936